கவின வைபவங்களுக்கு தேவையான பட்டுப் புடவைகள் மற்றும் இருவர்களுக்கான தெரிவுகளுக்கு
* கோபிராஜ் *
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில் சோபிக்க சோபன
* கோபிராஜ் *
ஆடை அகம்
16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சுடர்: திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 31 வெள்ளிக்கிழமை (15 - 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 229

# யாழ். மாவட்ட தேர்தலை நிறுத்தக் கோரும் மனுவை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது!

## உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல்

கொழும்பு, ஜூலை 15

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதை நிறுத்தும்படி உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துத் தீர்ப்பளித்தது.

தேர்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதனை நிறுத்த முடியாதென்பதே; மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் என்று நீதிமன்றம் மேலும் தெரிவித்தது.

இம் மனுவைத் தாக்கல் செய்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி,

மேன் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் தேர்தலை பின்போடும்படி ஈ. பி. ஆர். எல். எப். அமைப்பும் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதை நிறுத்தும்படி கோரி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தாக்கல் செய்த இந்த ரிட்மனு கடந்த திங்கட்கிழமை மேல நீதிமன்ற நீதிபதி ஜனாப் அமீர் இஸ்மாயில் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இம் மனுவில் தேர்தல் ஆணையாளர், யாழ். அரச அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டிருந்தனர்.

இம் மனு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வாதி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பி. நாகேந்திரா ஆஜராகி வாதாடினார்.

யாழ் மாவட்டத்தில் வாக்காளர்களின் சில அடிப்படை உரிமைகள் மீறப்பட முடியும் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது —

உதாரணமாக வாக்காளர் சமமாக நடத்தப்படமாட்டார்கள். யாழ். மாவட்டத்தில் 1986 தேர்தல் வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படவிருப்பதால் 1986 க்குப் பின்பு 18 வயதை அடைந்தவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்படவில்லை. என்று அவ வாதாடினார்.

அரச தரப்பில் சொலிசிட்டர் ஜெனரல் ஷிப்லி அஸீஸ் வாதாடுகையில் —

வாக்காளர் இடாப்பு பற்றி வாதி தரப்பினரின் நிலை சரியானதல்ல தேர்தல் ஆணையாளரின் கருத்துப்படி, நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பயன்படுத்தப்படும் சட்டங்களே யாழ்ப்பாணத்துக்கும் பொருந்தும் என்று கூறப்படுகிறது — என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் இம்மனுவை விசாரிப்பதற்கான நீதியரசர் குழுபற்றி மேன் முறையீட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நள்ளிரவுடன் காலாவதி

அவசரகாலச் சட்டம் இன்று நள்ளிரவுடன் காலாவதியாவதாக சட்டமா அதிபர் திலக் மாரப்பான ஜனாதிபதி பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தற்போது அமுலில் இருக்கும் அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பதில்லை என ஜனாதிபதி விஜேதுங்க தீர்மானித்துள்ளார்.

அதனால் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீண்டும் பிரகடனம் செய்யமாட்டார் என்றும் அவர் கூறினார். (இ-எ-6)

## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதிகளை தொடர்ந்து தடுத்து வைக்க அரசு திட்டம்

கொழும்பு, ஜூலை 15

இன்று நள்ளிரவுடன் அவசரகாலச் சட்டம் காலாவதியாவதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு அரச சட்டமா அதிபர் வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடுமையாக ஆட்சேபித்துள்ளதாக முன்னாள் சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். (இ-எ-6)

## வன்செயல்கள் குறித்து ஜனாதிபதி டி.பி. கவலை

கொழும்பு, ஜூலை 15

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டது முதல் வன்செயல்கள் இடம்பெற்றிருப்பது குறித்து ஜனாதிபதி டி.பி விஜேதுங்க அறிக்கை ஒன்றில் பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட சம்பவங்கள் பற்றி பொலீஸாருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பது குறித்து தாம் கவலை கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவங்களின் போது இரண்டு பேர் கொல்லப்பட்டார்கள் என்றும் 50க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளார்கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது. 10 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.

இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் முற்றிலும் ஜனநாயகத்துக்கு மாறானவை என்பதையும் —

ஜனநாயமற்றவை என்பதையும்-சமாதானத்தை விரும்பும் பொதுமக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று தாம் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடு இனிமேலும் உயிரிழப்பையோ உடைமைகளுக்கு ஏற்படும இழப்பையோ பொறுத்துக் கொள்ள முடியாது. இத்தகைய வன்செயல்கள் இடம்பெற்றால் இலங்கை சமாதானத்தை விரும்பும் நாடு என்ற நற்பெயரை இழந்துவிடும் பொருளாதார அபிவிருத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பகுதி மோதலில் 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 15

பூநகரிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் தமிழரசன் அல்லது நிமால் (இராசையா ஜெயகரன் — தாவடி தெற்கு). லெப்டினன்ட் கோபால் அல்லது உமைசன் (மாணிக்கப்பிள்ளை பன்னீர்ச்செல்வன் — ஆனைக்கோட்டை) 2 ஆம் லெப். சிவன் அல்லது செந்திநாதன் (அண்ணாமலை கமலேஸ்வரன் — கொக்குவில்) ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர். (ஒ-ஈ)

## அம்புலன்ஸ் வசதி இன்றி நோயாளர் பலர் அவதி!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள அரசினர் வைத்தியசாலைகள் பலவற்றில் அம்புலன்ஸ் சேவை நீண்ட நாட்களாக நடைபெறவில்லை.

இதனால் அவசர நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தூர இடங்களிலுள்ள மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை, அச்சுவேலி, சங்கானை, தெல்லிப்பழை போன்ற அரசினர் வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வாகனங்கள் இருந்தும் அவற்றிலுள்ள பற்றரிகள், மற்றும் சில உதிரிப்பாகங்கள் பழுதடைந்துள்ளன. இதனால் இவற்றைச் சேவையில் ஈடுபடுத்த முடியாது உள்ளது.

அண்மையில் கூட பிரசவ வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருந்த தாயார் ஒருவரை சங்கானை வைத்தியசாலையில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வருவதற்கு உடனடி அம்புலன்ஸ் வசதி கிடைக்கவில்லை என்றும் இதனால் அப்பெண்ணின் தாயார் தனது காரில் அனுமதித்து தோட்டை விற்று ஓட்டோ பிடித்து பிரசவவேதனையால் துடித்துக் கொண்டிருந்த மகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் விசாரித்தபோது பழுதடைந்த பற்றரிகள், உதிரிப்பாகங்களை தருவிப்பதற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

### உலக உதைபந்தாட்டக் கிண்ணம்:

## இத்தாலியும், பிரேஸிலும் இறுதிப் போட்டிக்கு தெரிவு

### ஞாயிறன்று வாஷிங்டனில் மோதல்

வாஷிங்டன், ஜூலை 15

உலக உதைபந்தாட்டக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இத்தாலியும் பிரேஸிலும் பெற்றுள்ளன,

இறுதிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வாஷிங்டனில் நடைபெறவுள்ளது:

நேற்று முன்தினம் நடந்த முதலாவது அரை இறுதிப் போட்டியில் இத்தாலி 2-1 கோல்களால் பல்கேரியாவைத் தோற்கடித்தது.

இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் பிரேஸில் 1-0 கோலினால் சுவீடனைத் தோற்கடித்தது.

இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இத்தாலியும், பிரேஸிலும் பெற்றதை இத்தாலி தலைநகர் ரோமிலும், பிரேஸில் தலைநகர் செல்பாலோவிலும் மக்கள் வீதிகளில் திரண்டு நின்று கொண்டாடினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## இந்தியாவில் பெரும் மழை 106 பேர் மரணம்

புதுடில்லி, ஜூலை 15

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் திடீரெனப் பெய்த பெரு மழையினால் 106 பேர் மரணமானார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

### முச்சந்தி முரளி



கவலை தெரிவித்து விட்டால் குற்றச் சாட்டுக்களில் இருந்து தப்பி விடலாம் என்டு டி. பியர் நினைக்கிறார் போலும்......!

## 134 தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 15

நேற்று முன்தினம் காலை வரை 134 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என்று கொழும்பு பொலீஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட கடைசித் தினமான கடந்த 11 ஆம் திகதி மட்டும் 65 முறைப்பாடுகள் கிடைத்தன.

எல்லாக் கட்சிகளினாலும் இம்முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடுகள் பதியப்படடவுடன் ... (இ-எ-6)

## ஹெலி வேட்டில் சந்நிதி ஆலயம் சேதமானது

யாழ்ப்பாணம், ஜூலை 15

தொண்டைமானாறில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஹெலித் தாக்குதலின் போது செல்வச் சந்நிதி ஆலயம் சேதத்துக்கு உள்ளானது.

## வேலணை பெண் பிரான்ஸில் கொள்ளையரால் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வேலணை இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் கடந்த 11 ஆம் திகதி பிரான்ஸில் கொள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்டார் எனத் தெரியவருகிறது.

திருமதி வடிவாம்பிகை செல்வகுமாரன் (வயது 24) என்ற பெண்ணே கொலையுண்டவர் ஆவார்.

இது தொடர்பான தகவல் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது உறவினருக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

## கருவாட்டு வியாபாரி போன்று நடித்த நெடுந்தீவைச் சேர்ந்த முக்கிய புள்ளி கைதாம்

கொழும்பு, ஜூலை 15

கருவாட்டு வியாபாரி போன்று நடித்து மூன்று வருடங்களுக்கு மேலாக கொழும்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வந்ததாகக் கூறப்படும் முக்கிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரை கொட்டாஞ்சேனையில் இரகசிய புலனாய்வுப் பிரிவினரும் கொட்டாஞ்சேனை பொலீஸாரும் கைது செய்தனர் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் தேர்தல் பிரசாரக் கூட்டம்

### நேற்று நுகேகொடையில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 15

ஜே. வி. பியின் தலைமையிலான தேசிய மீட்பு முன்னணி தனது தேர்தல் பிரசாரத்தை நுகேகொடையில் நேற்று நடத்திய பொதுக்கூட்டத்துடன் ஆரம்பித்தது

ஆனந்த சமரக்கோன் திறந்த வெளியரங்கில் நடந்த இப் பொதுக்கூட்டத்தில், சுமார் நாலாயிரம் இளைஞர்கள் கலந்து கொண்டனர்

அவர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் காணப்பட்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி ஈ.பி.டி.பி யினரின் ஆயுதங்களை களையுங்கள்

### ஈ. பி. ஆர். எல். எவ் கோருகிறது

கொழும்பு, ஜூலை 15

பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதால் தீவுப்பகுதியில் உள்ள ஈ. பி. டி. பி இயக்கத்தினரை நிராயுதபாணிகளாக்கும்படி ஈ. பி. ஆர். எல். எவ் அரசாங்கத்தைக் கோரி உள்ளது.

எதிர்வரும் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கமும் போட்டியிடுவது தெரிந்ததே.

இதற்கிடையில் தேர்தல் பிரசார வேலைகளுக்காக ஈ. பி. ஆர். எல். எப் உறுப்பினர்கள் தீவுப்பகுதிக்கு வரும் போது அவர்களுக்கு உணவோ அல்லது தங்குமிட வசதியோ செய்து கொடுக்க வேண்டாம் என்று தீவுப்பகுதி மக்களை ஈ. பி. டி. பி. கேட்டிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ் குற்றஞ் சாட்டி உள்ளது.

இதனை ஈ. பி. டி. பி மறுத்திருப்பதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

## ஐ. தே. கட்சி வேட்பாளராக ஹேமா இடம்பெறாதது ஏன்?

### அடிக்கடி மனம் மாறியதே காரணமாம்

தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து ஹேமா பிரேமதாஸா தனது மனதை அடிக்கடி மாற்றிக் கொண்ட தன் காரணத்தினால் தான் அவரது பெயர் கொழும்பு மாவட்ட ஐ தே க. வேட்பாளர் பட்டியலில் இடம்பெற முடியாது போயிற்று.

ஐ. தே. க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா முன்தண்டலாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது: கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும்படி ஹேமாவை ஐ. தே. க. கேட்டுக் கொண்டது. அதன்படி அவர் ஸ்ரீகோதாவுக்கு வந்து வேட்புமனுவில் கையெழுத்திட்டார். அதன் பின்னர் அவர் பெயர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

எனினும், வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கடைசி தினத்தன்று (11-7-94) காலை 7.45 மணியளவில் தாம் போட்டியிடவில்லை என்று தொலைபேசி மூலம் ஹேமா அறிவித்தார். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வது முடிவடைவதற்கு சிறிது நேரம் இருக்கும் போதும் அவரது பெயர் பட்டியலில் இருந்தது.

கடைசி நிமிடத்தில் ஹேமா கொழும்பு அரச செயலகத்துக்கு வந்து தாம் போட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் விமானத் தாக்குதல் பிரிவு!

### புதிய பிரிவு நேற்று மன்னாரில் குண்டுவீச்சு!!

கொழும்பு, ஜூலை 15

ஸ்ரீலங்கா இராணுவம் விமானத் தாக்குதல் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

புதிய பிரிவு நிறுவப்பட்டதன் பின்னர் அப்பிரிவு தனது முதலாவது விமானத் தாக்குதலை நேற்று மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறையில் நடத்தியது.

இரு ஹெலிக்கொப்டர்களே நேற்றைய தாக்குதலுக்குப் பயன்படுத்தப் பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமை அலுவலகம் இத்தகவலை அறிவித்தது. (ஒ-எ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

நவாலி வடக்கு

# நாச்சிமார் முருகன் ஆலயம்

# அலங்கார உற்சவம்

15-07-94 (வெள்ளி) முதல் 24-07-94 (ஞாயிறு) வரை தினமும் மாலை 4-30 மணிக்கு உற்சவம் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி சுவாமி வீதி வலம் வருவார்

உற்சவ காலங்களில் இரவு 8-00 முதல் 9-00 வரை

"கந்தபுராணம்"

என்ற பொருளில் தொடர் தெய்வீக பேருரைகள்

நிகழ்த்துபவர்:

பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி B. A. Dip - in - Ed

(திருமுருக கிருபானந்தவாரியாரின் பிரதம சிஷ்யன்)

ஆசிரிய ஆலோசகர் - யாழ். கல்வி வலயம் - II

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாச்சிமார் முருகன் ஆலய

தர்மகர்த்தா சபை.

(31922)



## பிறந்த தின நினைவலைகள்

## செல்வன் இராஜரெட்ணம் ஜீவகுமார்

தாயின் மடியில்:- 1970 - 07 - 15

தாயக மண்ணில்:- 1991 - 08 - 01

காலத்தால் அழியாத காவியமே
கானகத்தில் உருவான கங்கைநதியே
எட்டி எழுத முடியாத இதய வீணையே
சொல்லில் அடக்க முடியாத அன்பு வெள்ளமே
மலராகு முன்பே முடிவாகிப் போனவளே
பிறப்பெனும் நினைவை நாளில்
இன்று கண்ணீரில் நனைகின்றோம்.

உமது பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

செட்டிகுளம்
வவுனியா.

(31919)



# பிற்போடப்பட்டுள்ளது

இன்று (15-07-94) யாழ் மத்திய கல்லூரியின் வர்த்தக துறையினரின் பவள விழா நிமித்தமாக இடம்பெறவிருந்த "தேனிசை மாலை" நிகழ்ச்சி மிகவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வர்த்தக மாணவர் மன்றம்,
மத்திய கல்லூரி.

(31926)



# அழைக்கின்றோம்

ஓய்வுபெற்ற பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழாவில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் அவர்தம் சேவையுடன் தொடர்புடைய அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:- 16-07-94 சனிக்கிழமை காலை 10 மணி

இடம்:- கலாசாலை மண்டபம்

பயிற்சி பெற்ற ஆசிரியர்
மன்றம்

(31925)



# BASIC ENGLISH

ஆங்கிலத்தை பிழையின்றி எழுதவும், சரளமாக உரையாடவும் உகந்த பயிற்சி நெறி.

திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
4-00 — 5-00

by a well Experienced Teacher

ஆரம்பம்: 18 - 07 - 94

For Further Details:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3rd CROSS ST.,
JAFFNA.

(கி-8748)


## நாளை

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை (சனி) மாலை 6-45 மணிக்கு சிறுவர் கலைக்கூட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

(ஐ-51)

★ ★ ★

புனித உத்தரியமாதா பெருவிழாவை ஒட்டி கார்மேல் மாதா இளைஞர் மன்றம் தயாரித்து வழங்கும் 'தர்ம பிரகாசன்' என்ற நாட்டுக் கூத்து நாளை (சனி) இரவு 7-30 மணிக்கு குருநகர் கார்மேல் விளையாட்டு மைதான அரங்கில் நடைபெறவுள்ளது.

(ஐ-க-51)

★ ★ ★

வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குகோழிகளுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

(க-161)

★ ★ ★

வலி — கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான போசாக்கு பற்றிய பயிற்சி நெறி ஒன்று நாளை (சனி) முற்பகல் 8 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 15

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையம், திருகாசி விஸ்வநாதனின் சமூகப் பணியை கௌரவிக்குமுகமாக எடுக்கும் 60 ஆவது அகவை விழா நிகழ்ச்சி ஒழுங்கமைப்புச் சம்பந்தமான இறுதி ஆலோசனைக் கூட்டம் நாளை நடைபெற உள்ளது. நிலைய கேட்போர் கூடத்தில் கலை, கலாசாரக் குழுவின் ஏற்பாட்டில் கூட்டம் நாளை பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். (அ)


# மிருதங்க அரங்கேற்றம்



## செல்வன் இரா. பிரசாந்த்

(சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன் அவர்களின் மாணவன்)

காலம்: 15 - 07 - 1994 (இன்று)
வெள்ளி மாலை 4 30 மணி

இடம்: இளங்கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இசை அரங்கு

பாட்டு —
சங்கீத பூஷணம் திரு. எஸ். பத்மலிங்கம்

உடன்பாடுபவர் — திரு. ஆர். குகானந்தன்

வயலின் —
இசைஞானதிலகம் திரு ஆர். இராதாகிருஷ்ணன்

மிருதங்கம்
செல்வன் இரா. பிரசாந்த்

கடம் — கலாவித்தகர் திரு. க. கண்ணதாசன்

முகர்சிங் — வித்துவான் திரு. எஸ். ராஜா

தம்புரா — வித்துவான் திரு. என் சண்முகலிங்கம்

★ அன்புடன் அழைக்கிறோம் ★

திரு. சே இராஜேஸ்வரன்,
டாக்டர் திருமதி எஸ் இராஜேஸ்வரன்,
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(31911)



## கலைஞர் வேல் ஆனந்தன் ஆடல் அணியின்

## 'முழங்கும் முரசு'

ஆடற்கதை (S. OPERA)

திகதி மாற்றம்

16-07-94 17-07-94ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்ச்சி முறையே 30-07-94, 31-07-94ஆம் திகதிகளில் இடம்பெறும்.

— கலைக்கோவில்.

(31917)



# சோழனின் மக்கள் சேவையின்

# இரண்டாம் ஆண்டின் உதயம்

எமது வாடிக்கையாளர்கள்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
நன்றிகள்! நல்லாசிகள்!!

வளரும் ஆண்டிலும்
உங்கள் தேவைகளை
பூர்த்தி செய்யக்
காத்திருக்கிறோம்

வாழ்த்திசிறக்கும்
சகோதர
நிறுவனங்கள்

சோழன்
நெல் அரிசி வாணிபம்
நெல்லியடி

சோழன்
நெல் அரிசி வாணிபம்
மீசாலை

சோழன்
நடமாடும் விற்பனை நிலையம்
பலாலி சாலை,
திருநெல்வேலி.

சோ
ழ
ன்

பலாலி சாலை,
திருநெல்வேலி

வாழ்த்திசிறக்கும்
சகோதர
நிறுவனங்கள்

சோழன்
அரைக்கும் ஆலை
சிவலிங்கப் புளியடி,
யாழ்ப்பாணம்.

சோழன்
அரைக்கும் ஆலை
சங்கத்தானை

சோழன்
அரைக்கும் ஆலை
வதிரி

சோழன் சாக்கு கொள்வனவு நிலையம் சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம்.

# சோழன் அரிசி ஆலைகள்

(சி-8746)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சுப்பிரமணியம்

(பிரபல வெற்றிலை வர்த்தகர், திருநெல்வேலி)

மலர்வு: 03-04-1932

உதிர்வு: 15-06-1994

கனிந்த குரலும் கருணை உள்ளமும்
ஒளிர்ந்த சென்னியும் கொள்கையும் தாங்கி
தணிந்த நடையும் தவமும் காட்டி
பணிந்த மொழியும் பரிவும் தந்தீர்களே!

திருவில் பெரியோனாய் திறத்தில் பெரியோனாய்
அருகில் அணைத்தே அன்பால் இணைப்பீர்களே;
உருவில் ஒளியோனாய் உளத்தில் தூயவனாய்
அருளில் நிறைந்தவனாய் விளங்கி வந்தீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்:

மனைவி. பிள்ளைகள்
மருமக்கள், அருமைப்பேர்த்தி.

இராமநாதன் வீதி,
இருபாலை,
கோப்பாய்.

(31909)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை - வட மேற்கு நாவலடி

# ஸ்ரீ பேச்சி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

15-07-1994


ஸ்ரீ பேச்சி அம்பாள்
மகா கும்பாபிஷேக விழா சிறப்புற
வேண்டுகிறோம்

**புதிய ராதிகா நகை மாளிகை**
189, லெப். கேணல் சந்தோசம் வீதி,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

**ரதி அழகுசாதன பொருள்கள் விற்பனை நிலையம்**
53A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

**வின்னேஸ் பல்பொருள் விற்பனை நிலையம்**
45, சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்.

**அஜந்தாஸ் புடைவை மாளிகை**
பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் களஞ்சியம் மொத்த விற்பனை நிலையம்**
பாடசாலை வீதி, திருநெல்வேலி.

**கணேசன் களஞ்சியம்**
59, முருகமூர்த்தி வீதி,
வண். வடமேற்கு. யாழ்ப்பாணம்.

**சுந்தரம் ஸ்ரோர்ஸ்**
கொக்குவில் மேற்கு, தேணியடி.

**லிங்கம் கூல் பார்**
52, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

**லலிதா நகை மாடம்**
213, லெப். கேணல் சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்.


## அன்னை பேச்சியம்மனுக்கு அடியவர் அமைத்த ஆலயம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஔவையின் கூற்றுக்கு ஒப்ப யாழ். வண்ணை நகரில் ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பாக எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பேச்சியம்பாள் என்று வழங்கப்படும் மனோன்மணி அம்பாளிற்கு அம்பாளின் கருணையாலும், அடியவர்களின் சரீர மற்றும் பொருள் உதவிகளாலும் இன்று (15-07-94) ஆனி மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ இ. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் திருக்குட திருமஞ்சன பெருஞ்சாந்தி நவகுண்டபக்ஷ நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறும் திருவருளைப்பெற்று உவகை கொள்கிறோம்.

இவ்வாலயம் பற்றிய விரிவான சரித்திர சான்றுகள் இல்லாத போதிலும், மூதாதையரின் வழியாக கூறப்பட்ட சில வரலாற்றுச் செய்திகள் உண்டு. அம்பாள் இப்பொழுது கோயில் கொண்டிருக்கும் இடத்தில் ஒரு பெரிய நாவல் மரத்தின்கீழ் முன்னோர் ஒரு கல்லை நட்டு வழிபாடு செய்து வந்தார்களென அறியப்படுகிறது.

இவ்வாலயம் அமையக் காரணமானவர்கள் ஆலயம் அமைந்துள்ள காணியில் குடியிருந்த ஒரு ஏழைக்குடும்பம் என கூறப்படுகிறது. பிற்காலத்தில் அவர்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட ஆலயம் வீதியோரத்துக்கு தள்ளப்பட்டு வேலி போடப்பட்டது.

அக்காலத்தில் ஆவணி மாதத்தில் அம்பாளிற்கு பெரிய பொங்கல், மடைகள் பாமிச மடைகள் படைத்தே வழிபாடுகள் நடைபெற்றன. அவ்வேளை தமது பாரம்பரிய கலை வடிவங்களான கோவலன் சரித்திரம் காத்தவராயன் கூத்து போன்றவற்றை மேடையேற்றி விழாவைக் கொண்டாடியதாகவும் அறியக்கிடக்கின்றன.

வீதியோரம் கொண்டுவரப்பட்ட அம்பாளிற்கு வழிபாடு நடைபெறுவது தடைப்பட்டது. கற்பூர விளக்கு மட்டும் ஏற்றப்படும் நிலைமை இருந்து வந்தது.

இந்த அயலில் வாழ்ந்த கதிரவேலு தம்பிராசா என்பவர் சிறிது காலத்தின் பின்பு அம்பாளிற்கு பூசைகள் செய்து வந்தார். அவரால் சரஸ்வதி பூசை, திருவெம்பாவை என்பன நடத்தப்பட்டன; விழாக்களை நடத்த வசதி இல்லாததை சுட்டி அயல் காணிக்காரரிடம் இடம் கேட்கப்பட்டது; அவர் காணியை விஸ்தரித்து வழங்க மறுத்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

கேட்டு எழுதியவர்:
கந்தசாமி கிருபாகரன்

கூறியவர்கள்:
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை,
சடாசிவம் இராசரெத்தினம்,
நடராசா நாகராசா.

மலர் வெளியீடு
ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தானம்
அமைப்பு:
**தம்பிராசா பரமலிங்கம்**

### பேச்சியம்மன் விடிவை பெற்றுத்தருவாள்!

நாவலடி வீற்றிருந்து
நம்மவர்க்கு அருளும் நாயகியே!
ஆவலொடு எம்விடிவை
எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்!
பேச்சியம்மன் என்றபெயர்
பெற்றுத்தரும் இம்மண்ணின் விடிவை!
ஆச்சரிய மேலீட்டால்
ஆர்ப்பரிப்போம் சுதந்திர நாட்டில்!

— கவிகரன்


ஸ்ரீ பேச்சி அம்பாள்
மகா கும்பாபிஷேக விழா சிறப்புற
வேண்டுகிறோம்

**ஜெயா அழகுமாடம் உதிரி, மொத்த விற்பனை நிலையம்**
177A, 187. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**முருகன் வணிக நிலையம்**
295, இலந்தோ தெரு,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

**பி. ஐ. பர்னாண்டோ**
(பல்கட்டுநர், கண்ணாடி முகவர்)
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஒளி இல்லம்**
(அந்திய கால சேவைகள்)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**எஸ். கனகராசா இரும்புத் தொழிற்சாலை**
660, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

**சாயி போட்டோ**
1010/17, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

**சிந்துஜா அரைக்கும் ஆலை**
962 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.

**சிறிகுமாரி நகையகம்**
175/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8745)



சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

**மணிவிழா நிகழ்ச்சித் தொடர் - 07**
**நாடகமும் அரங்கியலும் கல்வியியற் கருத்தரங்கு**

இடம்: செங்குந்தா இந்துக் கல்லூரி
திருநெல்வேலி கிழக்கு
(இடமாற்றம்)
காலம்: 16-07-1994 சனி காலை 8-30 முதல்
பிற்பகல் 4 மணி வரை
17-07-1994 ஞாயிறு காலை 8-30
முதல் நண்பகல் 1 மணி வரை
தலைவர்: கலைப்பேரரசு ஏ. ரி பொன்னுத்துரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— மணிவிழாச் சபை.

(31916)



**G. A. Q. 1ST in Com.**
**யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி) 1995**

★ மேற் குறிப்பிட்ட பாட நெறிகளுக்கான விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

★ இதற்கான வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:
எஸ். அருள் நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8634)


### புலிகளின் குரல் வானொலியில்

15 – 07 – 1994
வெள்ளி இரவு

★ 8-01 — லெப் டினன்ட் சீலன், ஆனந் ஆகியோர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "உங்கள் சுவடுகளில்"
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்
★ 8-50 — வாத்தியகானங்கள்.

16 – 07 – 1994
சனி காலை

★ 7.02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7.30 — செய்திகள்
★ 7.35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.


விசேட முக்கிய அறிவித்தல்

யாழ். வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகம், யாழ். வணிக ஊழியர் கழகம், யாழ். நகைத் தொழிலாளர் சங்கம், யாழ் பொதி சுமக்கும் தொழிலாளர் சங்கம
இணைந்து விடுக்கும்

**முக்கிய அறிவித்தல்**

யாழ் வணிகப் பெருமக்களையும், நல்லூர் வணிகப் பெருமக்களையும், யாழ்ப்பாணம் வணிக ஊழியர்களையும், நல்லூர் வணிக ஊழியர்களையும், யாழ். நகைத் தொழிலாளர்களையும், பொதிசுமக்கும் தொழிலாளர்களையும் இன்று (15-07-94) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விசேட பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

அனைத்து சங்கங்களின்
நிர்வாகத்தினர்.

(சி-8637)


### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 – 07 – 1914
மறைவு: 15 – 07 – 1991

**அமரர் அல்பிரட் பிரான்சிஸ் இராசு**
(Retired P.W.D Store-keeper)

நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள் ஆசியும் அறிவுரையும் எம்மை என்றென்றும் வழிநடத்தும்;
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

136 பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.

(31915)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**டாக்டர் இ. அம்பலவாணர்**
(களபூமி காரைநகர்)

தோற்றம்: 05-06-1917
மறைவு: 15-06-1994

ஊரார் பிணி தீர்த்து ஈற்றில் பிறவிப்பிணி தீர்க்கும் ஈசன் திருவடி சேர்ந்த பாசத்தின் பிறப்பிடமான தந்தையே! எம்மை எல்லாம் அவையத்து முந்தியிருப்ப செய்தீர்! கண்கண்ட தெய்வமாம் உமைப்பிரிந்து கண்கலங்கி கதியிழந்து நிற்கின்றோம் நாம்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

களபூமி,
காரைநகர்.

### மூதறிஞர் க. சி. குலரத்தினம் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 15

மூதறிஞர் பல்கலைப் புலவர் அமரர் க. சி. குலரத்தினத்தின் உருவப்படத் திரைநீக்கமும், நினைவுப்பேருரையும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ் மாநகரசபை பொதுசன நூலகத்தின் நல்லூர் கிளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மூதறிஞரின் உருவப் படத்தை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் திரைநீக்கம் செய்து வைப்பார்.

"பணவளமும், தற்சார்புப் பொருளாதாரமும்" என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் நினைவுப் பேருரையாற்றுவார். (ஐ)


**கலைமதி விளையாட்டுக் கழகம்**
நடத்தும்
**மின்னொளியில் கரபந்தாட்டம்**

கலைமதி சனசமூக நிலையத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
பெ கர்மு வை. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஞாபகார்த்தமாக கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும்

**மின்னொளியில் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி**

இடம்: கலைமதி விளையாட்டுக் கழக மைதானம்
ஆரம்பம்: நாளை 16-7-94 சனி மாலை 7 மணிக்கு

ஐம்பதுக்கு மேற்பட்ட கழகங்கள் பங்குகொள்ளும் மேற்படி கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் கழகங்களுக்கு தங்கப்பதக்கமும் மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும்.

பரிசுகள் யாவும் 30-7-94 அன்று நடைபெறும் கலைமதி சனசமூக நிலையத்தின் 20ஆவது ஆண்டு விழாவில் வைத்து வழங்கப்படும்.

கலைமதி சனசமூக நிலையம்,
கலைமதி விளையாட்டுக் கழகம்.

கலைமதி வீதி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(31920)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுமுடைய 70ஆம் இலக்க வீடு (பிரதான வீதிக்கு அருகில்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல. 91, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (31903)

### காவேரி சீயாக்காய்

இன்று தமிழீழத்தில் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய் பவுடர் காவேரி. தரம் நிரந்தரம். எல்லா வர்த்தகர்களிடமும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. தயாரிப்பாளர்: சந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். [31787]

### இடமாற்றம்

ஒட்டுமடம் பொன்னப்பா ஒழுங்கையில் இயங்கிவந்த எனது வைத்தியசாலை தற்பொழுது யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சந்திக்கு அருகாமையில் (சிவன் வடக்கு வீதி) இயங்கிவருகிறதென்பதை அறியத் தருகிறேன். வைத்தியர் சிவசம்பு (31858)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசிற்பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். [7445]

### A/L 95,96

சித்திரம்
ஆசிரியர்
திரு: சிவப்பிரகாசம்
ஆரம்பம்:
16-7-94
3 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-8633)

### தேவை

ப்பளம் செய்வதற்கு உடனடியாக ஆள் தேவை. பல வருட அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது: தங்குமிட வசதி உண்டு சம்பளம் நேரில் பேசி பெறலாம். தொடர்பு: ஆதவன் பாமசி, கைதடி சந்தி, கைதடி. (7526)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## கேள்வி அறிவித்தல்
## தனியார் பாதுகாப்புச் சேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும், கைதடியில் அமைந்துள்ள சித்தவைத்தியத் துறையிலும் பாதுகாப்புச் சேவையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துள்ள தனியார் பாதுகாப்பு முகவர் அமைப்புக்களிடமிருந்து பொறிவிடப்பட்ட கேள்விகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கோருகின்றது.

மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 250/- ஐயும் மீளளிக்கப்படும் வைப்புப்பணமான ரூபா 2500-ஐயும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி அவரிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டுக்களை உதவிப்பதிவாளர்/நிர்வாகக் கிளையில் சமர்ப்பித்து உரிய கேள்விப்படிவங்களையும், விபரப்பட்டியலையும் 18-07-94-ம் திகதியிலிருந்து 03-08-94 திகதிவரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு 12-08-94 திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள உதவிப் பதிவாளர்/நிர்வாகக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச்சபைக்கு உண்டு.

-பதிவாளர்,
யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம்,
13-07-94
(சி-8789)

---

## அறிவித்தல்

யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை
பழைய மாணவர் சங்க
வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 17-07-94 (ஞாயிறு) பி. ப. 4 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி பழைய மாணவர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

திரு. செ. யோகச்சந்திரன் — தலைவர்
திரு நா. நாகேந்திரன் — செயலாளர்
(7480)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 - 01 - 1908
மறைவு: 06 - 07 - 1992

### அமரர் வயிரமுத்து பொன்னுத்துரை
(முன்னாள் உரிமையாளர் - லங்கா ஸ்ரோர்ஸ்)
திதி: 15 - 07-1994

தந்தையாய், குருவாய், தலைவனாய் எம்மை வழி நடத்தி, இன்று சிவத்தோடு கலந்து விட்ட உங்கள் இனிமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்;
குடும்பத்தினர்.

"பொன்னார் வளவு",
கோபுரம் பேற்று,
சுழிபுரம்.
(7524)

---

## நினைவஞ்சலி

34ஆம் ஆண்டு — 4ஆம் ஆண்டு



### அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்
(முன்னை நாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)
தோற்றம்: 22 – 07 – 1913
மறைவு: 02 – 07 – 1960



### திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)
தோற்றம்: 23 – 08 – 1920
மறைவு: 01 – 07 – 1990

**திதி: 15 - 07 - 1994**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை.
— குடும்பத்தினர்.
(சி-8724)

---

வண்ணை வடமேற்கு
## ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேக தினம்
15 – 07 – 1994

இன்று தொடக்கம் 45 தினங்கள் தினமும் இரவு 8மணியில் இருந்து 9 மணிவரை ஆலய முன்றிலில்
'செஞ்சொற் செல்வர்'
திரு த. சிவகுமாரன்
(காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர்)
நிகழ்த்தும்
"மகாபாரதம்"
தொடர் விரிவுரை நடைபெறும்.

-ஆலய அறங்காவல் சபை.
(சி-8744)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 13 — 12 — 1932
இறப்பு: 12 — 06 — 1994

### செல்வி சரோஜினிதேவி தில்லையம்பலம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், கடமையின் இலக்கணமாய் இருந்து எங்களுக்கெல்லாம் வாழ வழிகாட்டிவிட்டுத் திடீரென எம்மைவிட்டுப் பிரிந்த எங்கள் குலவிளக்கின் ஈமக்கிரியைகளில் பங்குபற்றி உதவிகள் புரிந்தோருக்கும், இரங்கல் உரைகள், மலர்வளையங்கள், மாலைகள் வழங்கியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (15-07-94) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(31912)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### திருமதி புஷ்பராணி நடராசா
அம்மையார்
உரும்பிராய் தெற்கு (சிறுவிளான்)

தோற்றம்: 21 01 – 1938
மறைவு: 15 06 – 1994

எங்கள் குடும்ப விளக்காக ஒளிவீசிய அம்மா! உங்கள் திடீர் மறைவு எங்களைப் பெரிதும் உருக்கி விட்டது. உங்களை என்றும் மறவோம். உங்கள் ஆன்மா சாந்தியுறுக!

எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய வைபவம் இன்று (15-07 94) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்வதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

செ. நடராசாவும், (கணவன்)
பிள்ளைகளும்.

சி சிவசுப்பிரமணியம் இல்லம்,
[illegible] வீதி,
உரும்பிராய்.
(31901)

---

கைதடி
## முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய வளர்ச்சி நிதிக்காக
## மாபெரும் நாடகவிழா

இடம்: வித்தியாலய அரங்கு
காலம்: 15 07 – 1994 (இன்று)
வெள்ளி மாலை 6-00 மணி

மகா வித்தியாலய மாணவர்கள் வழங்கும்
அனுபவம் புதுமை
வீரபாண்டிய கட்டப் பொம்மன்

சங்கானை 'மனோலயா" வழங்கும்
காத்தவராயன் (நாட்டுக் கூத்து)

அன்பளிப்பு: ரூபா 20-00 மட்டுமே
மாணவர்களுக்கு ரூபா 10-00

விளம்பர உதவி:
நாதன் கூல்பார்
சங்கத்தானை, சாவகச்சேரி.
[சி-8741]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12 – 05 – 1936
உதிர்வு: 15 – 07 – 1991

### அமரர் கணபதி செல்வராஜா
(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர்)

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
வாழையடி வாழையாக நாம் வாழ நினைத்த வேளையிலே
பொன்னான உங்கள் மேனியிலே காலன்
பொல்லாத நோயாகி........... மலர்ந்தானோ?
கண்ணின் கருமணியாக காத்துவந்த செல்வங்களை
விட்டுவிட்டே காற்காலமேகமென மறைந்ததேனோ?
தங்கிநின்ற ஆலமரம் வீழ்ந்துவிடில்
பறவைகள் நாம் நிழல் தேடி எங்கு செல்வோம்?
எரிகின்ற கண்ணீரின் கூட - நாங்கள்
காவியங்கள் படைத்திடுவோம்
உங்கள் நினைவுகளை மீட்டுவதால்.

நீங்காத நினைவுகளுடன்,
அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்.

சின்னக் வீதி,
காங்கேசன்துறை
(7523)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி சபாரெட்டினம் ராசமணி

தோற்றம்: 09 01 1922
மறைவு: 15-06-1994

குடும்பத்தின் ஒளி விளக்கே
பாசத்தின் உறைவிடமே
அன்பாய் வளர்த்து விட்டு
அதி விரைவாய் சென்றதேனோ!

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டும், எமக்கு பல வழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான செல்வ விநாயகர் அருள்பாலிப்பாராக.

அன்புடன்;
கணவன், மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாற்குளம் ஒழுங்கை புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(31906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தேர்தலின் பின் பெரும் போர்!

உள்ளத்தில் உள்ளதை மறைப்பதற்கு ஒருவன் எவ்வளவு முயன்றாலும் அது அனைவரும் அறியாமல் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் வெளியே வந்துவிடும். இது நடப்பியல் உண்மை.

அந்த வகையில் தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட விவகாரத்தில் ஆளும் கட்சியின் — ஐ.தே. தேசியக் கட்சியின் — "உள்ளக்கிடக்கை" வெளிவந்துவிட்டது ஆம். அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர் விவகாரத்தில் தனது கொள்கையை தெளிவுபடுத்தி உள்ளது. சுயரூபத்தைக் காட்டியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு முடிந்தால் அரசியல் தீர்வு காணப்படும்; இல்லையேல் இராணுவத் தீர்வு காணப்படும். — என்பதே ஐ. தே. கட்சியின் கொள்கை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் சரியான, முழுமையான அர்த்தம் அக் கட்சி இராணுவத் தீர்வையே தனது முடிவாகக் கொண்டுள்ளது என்பதாகும்.

அரசியல் தீர்வைக் கொண்டுவர முடிந்து பார்த்தோம்; முயன்று பார்க்கிறோம்; அதனை எய்துவதற்கு அடுத்த தரப்பு ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை. அதனால் இராணுவத் தீர்வுக்கே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்று "நியாயம்" கூறுவதற்காக இப்படி ஒரு தந்திரம்!

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையால், இராணுவ மேலதிக்கத்தால் அடக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டநாள் கொள்கையாக — நிரந்தரக் கொள்கையாக — இருக்கிறது.

ஆனால் அதன் தலைவர்கள் இராணுவத் தீர்வு தான் என்பதை திட்டவட்டமாக, வெளிப்படையாகக் கூறாமல், இருந்திருந்தாற் போல அரசியல் தீர்வில் தமக்கு நாட்டம் இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காக நேரத்துக்குப் பொருத்தமாக நாடகம் ஆடி வந்தார்கள்.

அந்த நாடக வேளைகளில் போடப்பட்ட வேடங்கள் பல. ஜே. ஆர். அனைத்துக் கட்சி மாநாடு என்றும் தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சு என்றும் வேடம் போட்டார். இத்தனைக்கும் அவர் போர் என்றால் போர் என்று இறுமாப்புடன் கட்சியின் கொள்கையை வெளிப்படுத்தியவர்.

பிரேமதாசாவோ அரசியல் கட்சிகள் மாநாடு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்று வேடம் போட்டார். விடுதலைப் புலிகளுடன் பேசுவதாகவும் தமது நாடகத்தில் ஓர் காட்சியை அமைத்தார்.

விஜேதுங்கா வந்தார். தன்னை அறியாமலே கட்சியின் உண்மையான கொள்கையை வெளிப்படுத்தினார். எனினும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகிறது என்றதும் அவரும் வேடங்கள் போடத் தொடங்கினார். இப்போது பொதுத் தேர்தல் என்று வந்ததும் கட்சியின் நிரந்தரமான கொள்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்!

பானையில் இருப்பதுதானே அகப்பையில் வரும். ஆகையால் தமிழர் விவகாரத்தில் ஐ. தே. கட்சியின் கொள்கை என்ன என்று உத்தியோகபூர்வமாக, ஊர்ஜிதமாகத் தெரிந்துவிட்டது. ஆகவே அக்கட்சி ஆட்சிக்கு வந்தால் போர் தொடரும் என்பதில் இனிமேல் என்ன சந்தேகம்?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதினேழு வருடங்கள் எதிர்க்கட்சியாக இருப்பதால், தான் பதவிக்கு வருவதற்காக, கவர்ச்சிகரமாகச் சில அரசியல் வார்த்தைகளைப் பயன்படுத்தலாம். அவற்றைக் கண்டு அக்கட்சியின் கொள்கை ஆளுங்கட்சியைவிட வித்தியாசமாக இருக்கும் என்று ஏங்கவோ, நம்பவோ முடியாது; நம்பக்கூடாது.

ஆகையால் தென்னிலங்கையின் தேர்தல் முடிந்த பின்னராவது யுத்தம் நிறுத்தப்படும்; தமிழர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்பது, கடல் வற்றும் எனக் காத்திருந்து உடல் வற்றிச் செத்த கொக்கின் கதையாக முடியும். எனவே தேர்தலின் பின்னர் பெரும் யுத்தம் ஒன்று வரும் என்று எதிர்பார்த்து, அதனை எதிர்கொள்ளவும், வெல்லவும் தயாராக வேண்டிய தேவை தமிழருக்கு உண்டு. அதனை மறந்துவிடலாகாது.

பிரதேச செயலர் பிரிவுகளில்

# வேலை வாய்ப்பு தகவல் பிரிவு

வலிகாமம் தெற்கு ஜூலை 15

வெளிநாட்டு, உள்நாட்டு வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்கவும் —

வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வது சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்கவும் —

வழிகாட்டல் வழங்கவும் —

அது தொடர்பான இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும் — ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வேலை வாய்ப்பு தகவல் பிரிவை ஆரம்பிக்குமாறு உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு செயலாளர் திரு. ஜஸ்டின் பெர்னாண்டோவினால் அறிவிக்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில், வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்படி தகவல் பிரிவொன்றை பிரதேசச் செயலர் திரு. ஆ. மகாலிங்கம் ஆரம்பித்துள்ளார்.

இவ் வேலை வாய்ப்பு தகவல் பிரிவுக்கு பொறுப்பாக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. த. தேவராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதத்தில் இருந்து மேற்படி வேலை வாய்ப்பு தகவல் பிரிவுக்கென தனியான கட்டடமொன்று உடுவில் பிரதேசச் செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. (இ-152)

## கணித பாட பயிற்சி வகுப்பு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஜி. சி. ஈ. சாதாரணதர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கணித பாட விசேட பயிற்சி வகுப்புகள் கோட்ட கணித பாட முதன்மை ஆசிரியர்களால் இன்று முதல் நடத்தப்படவுள்ளன.

ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதபாடத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் பின்னடைவை மேம்படுத்துவதற்காக இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

## தேர்தல் விதிகளை மீறினால் கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 15

பொதுத் தேர்தல் காலத்தில் தேர்தல் விதிகளை மீறும் அனைவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் பொலிஸாரை பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா பணித்துள்ளார்.

இத்தகவலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் டீ. பேரின்பநாயகம் 'தினமின' நாளிதழுக்குத் தெரிவித்தார். (ஒ-எ-6)

## முதலுதவி எழுத்துப் பரீட்சை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் நடத்தும் அடிப்படை முதலுதவி தொடர்பான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் (ஞாயிறு) முற்பகல் 10 மணிக்கு செஞ்சிலுவை பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளுக்குரிய சுட்டெண்கள் பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில்

# பல் கட்டும் சிகிச்சைப்பிரிவு இயங்க முடியாத நிலை

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் உள்ள பல்கட்டும் சிகிச்சைப் பிரிவு முற்றும் இயங்காத நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல் கட்டுவதற்குத் தேவையான மூலப்பொருள்கள் முடிவடையும் தறுவாயில் இருப்பதாலும் —

புதிதாக மூலப் பொருள்களைத் தருவிக்கும் முயற்சியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலுமே இந்த நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த பத்து ஆண்டுகளின் பின்னர் இப்போதுதான் யாழ். ஆஸ்பத்திரியில் பல் கட்டும் பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. அதன் பின்னர் இதுவரை 55 பேர் பலன் அடைந்துள்ளனர். பல் கட்டுவதற்காக 150 பேர் முன்கூட்டியே பதிவு செய்துள்ளனர். தற்போது கைவசமிருக்கும் மூலப்பொருள்களை வைத்துக் கொண்டு இவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் மட்டுமே இயங்கிவரும் பல்கட்டும் சிகிச்சைப் பிரிவில் ஒரே ஒரு தொழில்நுட்பவியலாளரே பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் —

யாழ். ஆஸ்பத்திரியில் கிடக்கும் பள்ளமான சிதைவடைந்த நிலையிலான தரையைக் கொண்ட அறையில் பல்கட்டும் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. இது பல் கட்டும் சிகிச்சைப்பணி செய்வதற்கு இடம்பெறுவதற்கும் அசௌகரியத்தைக் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [எ-15]

## ஆலயங்களில்

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி உற்சவம் நிறைவுறும். உற்சவ தினங்களில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை சமயச் சொற்பொழிவு இடம்பெறும் (ஒ)

★ ★ ★

குருநகர் புனித கார்மேல் அன்னையின் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 6 30 மணிக்கு நடைபெறுகிறது.

இன்று வெள்ளி மாலை 5 00 மணிக்கு நற்கருணை ஆராதனை, சுற்றுப்பிரகாரம் ஆகியன நடைபெறும்.

நாளை காலை 6-30 மணிக்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும். (க-51)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆண்டு 9 இற்கான தன்னறிவுத் தேர்ச்சிக் கணிப்பு படிநிலை – 5 செயற்பாடு இன்று வெள்ளி பி. ப. 2 மணிக்கு வலயம் 2 ஐச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

செய்கைத்தாள்களை அந்தந்தக் கோட்டங்களில் இன்று காலை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. மேற்படி செய்கைத்தாள் 11, 12, 14 படிமுறைகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

★ ★ ★

யாழ். திருமறைக் கலாமன்றக் கலைக் கவின் பயிலக மாணவர்களின் மூன்றுநாள் ஓவியக் கண்காட்சி இன்று முற்பகல் 9-30 மணிக்கு மன்றக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இன்றும் நாளையும், நாளை மறுதினமும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை கண்காட்சியை பார்வையிடலாம். (ஐ-51)

★ ★ ★

அனைத்து வர்த்தக ஊழியர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று வெள்ளி பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என வர்த்தக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ)

★ ★ ★

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டம் நடத்தும் சிறுவர் நாடக விழா இன்று (வெள்ளி) பிற்பகல் 2 மணிக்கு மாவிட்டபுரம் மகளிர் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு வே. கந்தசாமி விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

யாழ் பல்கலைக்கழக ஆங்கில மன்றத்தின் "தேர்ட் ஐ" (Third Eye) இரண்டாவது இதழ் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 00 மணிக்கு புவியியல் விரிவுரை மண்டபத்தில் திரு ஏ. ஜே. கனகரத்தினா தலைமையில் நடைபெறும். இதழ் விமரிசனத்தை பேராசிரியர் கா. சிவத்தம்பி நிகழ்த்துவார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (ஒ-69)

## சிலன் - ஆனந்த் நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆயுதங்களைபறி கொடுத்து எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக் கூடாது என்ற கொள்கைக்கமைய சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சிலன், வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின் 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மீசாலை, அல்லாரை வெள்ளம் போக்கட்டியில் உள்ள சிலன், ஆனந்த் நினைவு பூங்காவில் இன்று இரவு 7-30 மணிக்கு கூட்டம் இடம்பெறும்.

கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. அமுதன் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அங்கு அஞ்சலியுரையாற்றுவர். (ஐ)

## கனடா தமிழ்ப் பண்பாட்டு மாநாடு ஒத்திவைப்பு

டொறன்டோ, ஜூலை 15

கனேடிய யோர்க் பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த ஆறாவது தமிழ்ப்பண்பாட்டு மாநாடு அடுத்த வருடம் மே மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

கனேடிய தமிழ் கலாசார இயக்கம் இவ்வாறு அறிவித்துள்ளது.

மே மாதக் கடைசியில் இடம்பெறும் மாநாட்டு திகதிகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று மேற்படி இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## யாழ். மத்திய கல்லூரியின் 175 ஆண்டு நிறைவு விழா

யாழ். மத்தியகல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 175 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள விழா இம் மாதம் 31 ஆம் திகதி கல்லூரியில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

காலை 8 30 மணிக்கு விழா ஆரம்பமாகும். யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் முதன்மை விருந்தினராகவும் —

பேராசிரியர் வி. நவரட்ணராஜா, கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன், லயன் எஸ். இராமகிருஷ்ணன், முன்னாள் ஒலிம்பிக் வீரர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ)

## பாண் தயாரிப்பதில் ப. நோ. கூ. சங்கங்கள்

யாழ். மாவட்டத்தில் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் வெதுப்பகங்களை(பாண் பேக்கரிகள்) ஆரம்பித்துள்ளன.

இவ் வெதுப்பகங்களில் ஒரு இறாத்தல் பாண் 7 ரூபா 50 சதமாக விற்கப்படுகிறது. தனியார் வெதுப்பகங்களில் ஒரு இறாத்தல் 8 ரூபாவாக விற்கப்படுகிறது.

கரவெட்டி, அச்சுவேலி, பண்டத்தரிப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களே தற்போது வெதுப்பகங்களை ஆரம்பித்துள்ளன.

கூட்டுறவு வெதுப்பகங்கள் குறைந்த விலைக்கு விற்பது போன்று, தனியார் வெதுப்பகங்கள் சில பாணின் விலையைக் குறைக்க ஆரம்பித்துள்ளன. (இ-எ-4)

தமிழ் நாட்டில்

## பாடசாலை மாணவர்களுக்கு இலவச மருத்துவ சோதனை

சென்னை, ஜூலை 15

தமிழ் நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இலவச மருத்துவ பரிசோதனை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான திட்டத்தை செல்வி ஜெயலலிதா நாகர்கோவிலில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் தொடக்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் செயற்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டத்தின்படி முதலாம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை நடத்தப்படும். (ஐ-க)

குளங்களில் உள்ள

## நுளம்பு குடம்பிகளை அழிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாநகர எல்லைக்குள் உள்ள குளங்களில் மலேரியாவைப் பரப்பும் அனோபிலிஸ் நுளம்புக் குடம்பிகளை ஒழித்துக்கட்டும் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் எட்டுக் குளங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றுள் இரண்டு குளங்களில் இந்த நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதை யடுத்து அபற் (Abat) என்ற மருந்து மூலம் இக்குடம்பிகள் அழிக்கப்பட்டன.

இதே போன்று மாநகர சபைப் பகுதியில் நீர்தேங்கியிருக்கும் இதர குட்டைகளுக்கும் மருந்து தெளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அறிய வருகிறது. (இ-4)

## கல்வியியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் மணிவிழாவை ஒட்டிய நிகழ்ச்சித் தொடரின் ஏழாவது நிகழ்வான நாடகமும் அரங்கியலும் பற்றிய கல்வியியற் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளைய நிகழ்ச்சிகள் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 4-30 மணி வரையும் — ஞாயிறன்று நிகழ்ச்சிகள் காலை 8-30 மணிமுதல் பிற்பகல் 12-30 மணிவரையும் இடம்பெறும்.

கலைப் பேரரசு ஏ. டீ. பொன்னுத்துரை நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிப்பார்.

நாடகமும் அரங்கியலும் தொடர்பாக பல்வேறு தலைப்புகளில் இரண்டு நாட்களும் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஐ-க-111)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

காங்கேசன்துறை லங்கா சிமெந்து தொழிலாளர்களின் மே, ஜூன் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நாளை (சனி) காலை 8 30 மணிமுதல் ஒரு மணி வரை யாழ் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## மணலாற்றில் தங்கியிருக்கும் 7,500 படையினருக்கு ஆபத்து

### ராணுவ அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

ஸ்ரீலங்கா இராணுவம் மணலாற்றில் தங்கியிருப்பது என்பது பெரும் ஆபத்தாக உள்ளது என உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மணலாற்று பிரதேசத்தில் சுமார் 7 ஆயிரத்து 500 இராணுவத்தினர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக "த சண்டே லீடர்" ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருடம் ஜூலை 25 இல் விடுதலைப் புலிகள் மணலாறு இராணுவத்தினர் மீது பயங்கரமான தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலில் 69 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐந்து கோடி ரூபா பெறுமதியான இராணுவ தளபாடங்களும் புலிகளால் அள்ளிச் செல்லப்பட்டன. இதனைக் கருத்திற் கொண்டு மணலாற்றில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் 7 ஆயிரத்து 500 உறுப்பினர்களும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

மணலாறு ஸ்ரீலங்கா இராணுவ முகாம் பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்த "த சண்டே லீடர்" பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளின் சுறுசுறுப்புள்ள மையமாக மணலாறு திகழ்கிறது என்றும் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

வடமராட்சியில்

## உல்லாசப் பயணிகளால் தொல்லைப்படும் மக்கள்

வடமராட்சி, ஜூலை 15

வடமராட்சிப் பகுதியில் சுற்றுலா மேற்கொள்ளும் உல்லாசப் பயணிகள் பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்து வருகிறார்கள் என முறையிடப்பட்டுள்ளது.

சிற்றூர்திகளில் (மினிபஸ்) வரும் இப் பயணிகளில் சிலர் வீதியால் வருவோர் போவோர் மீது தடிகளால் தாக்குவது, அவர்கள் மீது நீர் வாரிறைப்பது, எச்சில் நீரை வாரி உமிழ்வது போன்ற சேட்டைகளை ஆண் பெண் என்ற வேறுபாடு களின்றி செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தமிழீழ காவல் துறையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னர் போன்று ஞாயிற்றுக்கிழமையில் மட்டுமல்லாது, இப்போது தினமும் சுற்றுலாப்பயணத்தை மேற்கொண்டு மக்கள் வடமராட்சிக்கு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-173)

## தமிழ்மண்ணின் அபிவிருத்திக்கு உறுதுணையான பேராசிரியர்

### உருவப்பட திரை நீக்க விழாவில் பாராட்டு

"பேராசிரியர் துரைராசா புவியியல் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து தமிழ் மண்ணின் அபிவிருத்திக்கு உறுதுணையாக வாழ்ந்தார்"

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடந்த பேராசிரியர் துரைராசா உருவப்படத் திறப்பு விழாவில் உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ் பாலச்சந்திரன் தலைமையில் 12 ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில் மேலும் கூறியதாவது.

பொறியியல், விவசாயம் உட்பட பல்வேறு துறைகளுக்கான ஏழு பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் பேராசிரியர் துரைராசா காலத்தில் உருவாக்கப்பட்டன. தற்பொழுது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் உள்ள இத்திட்டங்களை அமுலாக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள கல்விமான்களும் பல்கலைக்கழக சமூகமும் பேராசிரியர் துரைராசாவை மதித்தனர் என்றும் அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து மலர் மாலை அணிவித்தார். (ஐ-111)

## அன்னை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார்

இக்கருணைத்தில் அம்பாள் ஆலயத்தை ஆதரித்து வந்தவரான கதிரவேலு தங்கராசா என்பவர் 1985 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அதன் பின் அயலவர்கள் கூடி ஓர் நிர்வாக அமைப்பை உருவாக்கி பூசனை நடத்த பூசகர் ஒருவரையும் நியமித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு வளர்ச்சி பெறும் காலத்தில் இடையூறு உண்டாக்கியவர்களின் தடைகளின் மத்தியிலும் ஆலயம் அயல் காணியில் ஒரு பகுதியையும் தனதாக்கிக் கொண்டு வளர்ச்சி பெற்றது அம்பாளின் திருக்கடாட்சம் எனக் கருதப்படுகிறது.

இவ்விதம் 1986 ஆம் ஆண்டு அம்பாளிற்கு பாலஸ்தாபனம் இடம்பெற்றது. இன்று அழகாக உருவாக்கம் பெற்ற ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

முக்கிய பூசைகளாக நவராத்திரி பூசை, திருவெம்பாவை, கூருவாதிரை ஆகியன ஆண்டுகள் தோறும் நடைபெறுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாக பங்குனி கடைசித் திங்களில் திருக்குளிர்த்தி விழாவும், மகேசுர பூசையும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அம்பாளை மனமுருகி வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று நிறைந்த பேரின்பத்தை பெறுவோமாக! ★

## மருந்தாளர் பயிற்சி இறுதித் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த ஐந்து மாதங்களாக நடைபெற்ற மருந்தாளர் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கான இறுதித் தேர்வு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மருந்தாளர்களுக்கு நிலவும்பற்றாக்குறையை அடுத்து வடபிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தினரின் ஆதரவுடன் இந்த முதற்கட்ட பயிற்சி நெறியை நடத்தியது.

இறுதித் தேர்வில் சித்தியடையும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். அதன் பின் அவர்கள் வடபிராந்திய மருந்தகங்களில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 4)

ஆணே உனக்கு என்ன விலையா?
அவனியில் நீ உயிரற்ற இலையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாறும் சமூகக்கல்வியும்**
(திருத்திய பதிப்பு)

**ஆண்டு - 6**

இலகு செயல் நூல் 32/-

பரீட்சைக்கு ஏற்றது. ஆக்கம்: நா. மயில்வாகனம்
புத்தகசாலைகளில் பெறலாம்.

(31918)



சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய
**அபிவிருத்தி நிதிக்காக**

# மாபெரும் கலை நிகழ்ச்சி

இடம்:
மகளிர் ம. வி. திறந்த வெளி அரங்கு
இன்று (15-07-1994) வெள்ளிக்கிழமை
மாலை 6.00 மணிக்கு

அன்பளிப்பு (நுழைவுச் சீட்டு)
ரூபா: 500/- 250/- 100/- 50/- 25/-

நிகழ்ச்சிகள்:
திலக நர்தனாலய மாணவிகளும்
மகளிர் ம. வி. மாணவிகளும்
இணைந்து அளிக்கும்
**நடன நிகழ்ச்சிகள்**

சங்கீத வித்துவான்
பொன். சிறிவாமதேவன்
ஆசிரியர் அவர்களும்
அவரது மாணவ குழுவும்
இணைந்து நடத்தும்
**இசை நிகழ்ச்சிகள்**

அனைவரும் திரண்டு வருக! ஆதரவு நல்குக!

—பாடசாலை அபிவிருத்தி சபை,



சிறப்புற வாழ்த்துவோர்:

**அருள்முருகன் நகை மாளிகை**
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவா நகை மாடம்**
யாழ் வீதி,
சாவகச்சேரி.

[31899]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இளையதம்பி விசாலாட்சி

திருமதி இளையதம்பி விசாலாட்சி காலமானார். அன்னார் இளையதம்பியின் அன்பு மனைவியும், பாலகிருஷ்ணனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், இந்திரபவானியின் அன்பு மாமியும், சத்தியசுதன் (சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை), தசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பாலகிருஸ்ணன்
(மகன்)

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

(31931)

### வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

வெள்வத்தை, கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை அவர்கள் 12-07-94 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்தார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், கணேஸ் (Asst Productmanager United Tractor & Equipment Ltd, Colombo), மல்லிகா, சிவகுமார், தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஆனந்தவேல், சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜனியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. ஆனந்தவேல்
மருமகன்

(31930)

திருமதி
### வடிவாம்பிகை செல்வகுமார் (ஆனந்தி)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரான்சில் வசித்தவருமான திருமதி வடிவாம்பிகை செல்வகுமார் 11-07-1994 இல் பிரான்சில் அகாலமரணமானார்.

இவர் நாகராசா செல்வகுமாரின் அன்பு மனைவியும், பிரசாந், வினோசாந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசையா - திருமதி புனிதவதியின் அன்பு மகளும், புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த நாகராசா காலஞ்சென்ற திருமதி இராசம்மாவின் அருமை மருமகளும், புஸ்பராணி, இராசநாதன், யோகராணி, சோமநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, இராசகுமார், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சோ. மார்க்கண்டு
(சிறிய தந்தையார்)

687/6, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(31929)

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் சித்திமடு என்னும் இடத்தில் கடந்த 10 ஆம் திகதி படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் காயமடைந்த துணைப்படை வீரர் உடனே சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

நவரட்ணம் நற்குணம் (வயது 30) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான துணைப்படை வீரரே இவ்வாறு வீரச்சாவடைந்தவராவார்.

## யாழ். மாவட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத் தலைமை நீதிபதியின் உத்தரவு வரும் வரை, இம்மனு மீதான விசாரணையை நீதிபதி அமீர் இஸ்மாயில் நேற்று வரை ஒத்தி வைத்திருந்தார்.

ஏ. டபிள்யு. குணசேகராவின் அனுசரணையுடன் சட்டத்தரணிகள் திருமதி சித்தி திருச்செல்வம், ஆர். பாலசுப்பிரமணியம், செல்வி ரமணி முத்தெட்டுவேகம ஆகியவர்களின் உதவியுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பி. நாகேந்திரா மனுதார் தரப்பில் ஆஜரானார்:

முதலாவது, மூன்றாவது பிரதிவாதிகள் சார்பில் அரச சட்டத்தரணி குமார் போலின் அனுசரணையுடன் சொலிசிட்டர் ஜெனரல் ஷிப்லி அஸிஸ் ஆஜரானார். (அ-எ 6)

## அம்புலன்ஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடைகள் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி கோரப்பட்டதாகவும், ஆனால் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவினர் இதற்கான அனுமதியை வழங்க மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சங்கானை, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைகளில் அவசர நோயாளருக்கு மட்டும் வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் தனியார் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், தேவைப்படுவோர் மேற்படி வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவற்றை ஒழுங்குசெய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-4

## ஐ. தே கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிடவிரும்புவதாகத் தெரிவித்தார். அவ்வேளை அவரின் பெயருக்குப் பதிலாக கொழும்பு மாநகர முன்னாள் மேயர் ரட்ணசிறி ராஜபக்ஷாவின் பெயர் சேர்க்கப்பட்டு விட்டது.

அதனால் ஹேமாவுக்கு உதவ முடியாத நிலையில் நாம இருந்தோம். ஹேமா தனது மனதை அடிக்கடி மாற்றி நிலையான தீர்மானம் எடுக்க முடியாதவராக இருந்ததால் தான் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது.

இவ்வாறு டாக்டர் விஜேசேகரா தெரிவித்தார். (இ-எ)

## வன்செயல்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாடு அடைந்துள்ள முன்னேற்றமும் இதனால் பாதிப்படையும்.

இத்தகைய வன்செயல்கள், சுதந்திரமான முறையிலும் நியாயமான ரீதியிலும் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு உதவமாட்டா என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைமுறைகளை சீர்குலைக்கக்கூடிய ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்செயல்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொலீஸாருக்கு தாம் விசேட பணிப்புரை விடுத்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டம் கடுமையாகவும் எவ்வித பாரபட்சம் இன்றியும் அமுல் செய்யப்படல் வேண்டும். அமைதியான சூழ்நிலையில் தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக சகலரும் பொலீஸாருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தி உள்ளார்.

இதற்கிடையில் தேர்தல் சுதந்திரமாகவும், அமைதியாகவும், கண்ணியமாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த பிரதான அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு முக்கியமானது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். (இ-எ)

# சஜித் - துலாஞ்சலி முன்னரே வந்து காத்திருந்தனர்

கொழும்பு, ஜூலை 15

நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய ஹேமா கொழும்பு அரச செயலகத்துக்கு வருவதற்கு முன்னரே அவரது புதல்வர் சஜித்தும் புதல்வி துலாஞ்சலியும் அங்கு காத்து நின்றனர்.

பின்னர் ஹேமா வந்து தனது பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டார்.

ஹேமாவின் பெயர் வேட்பாளர் பட்டியலில் இல்லை என்று அறிந்தவுடன், தாயும் பிள்ளைகளும் செயலகத்தை விட்டு அகன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# ஐ. தே. க தேசிய பட்டியலில் இடம்பெற்றுள்ள 29 பேர்

ஐ. தே. க தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள 29 பேரின் பெயர்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் வருமாறு:

அநுரா பண்டாரநாயக்கா, தே. எ. சொக்ஸி, சிறிசேன கூரே, எஸ். தொண்டமான், ஆரிய ரெக்காவா, டாக்டர் காமினி விஜேசேகரா, ஹென்றி ஜயமஹா, ஜயவத் ஜெயவர்த்தனா,

டாக்டர் ராஜிதா சேனரத்ன, அமரா பியசீலி ரத்நாயக்கா, ஹலீம் இஷாக், சரத் குணசேகரா, இந்திரதாஸ ஹெட்டியாராச்சி, ஏ. சி. எச். முகம்மது, டி. விமலசேன,

ஏ. எம். டி. ராஜன் கமல் கருணாநாயக்க, எஸ். பி. கரலியத்த, ஏ. எச். எம். அஸ்வர், ஜி. எம். பிரேமச்சந்திரா,

பி. ஆர். ரத்நாயக்கா, டபிள்யு. கருணாதாஸ, ரவீந்திர ரந்தெனியா, எம். எம். முஸ்தபா, பீற்றர் கஸ்ர,

டபிள்யு. பி. பி. திஸநாயக்க, ராஜா செனவிரத்னா, எம். வி. ஆமிர், வி. புத்திரசிகாமணி. (இ-எ)

# பொ. ஐ. முன்னணியின் தேசிய பட்டியலின் விவரம்

கொழும்பு, ஜூலை 15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம் பெறும் 29 பேரின் விவரம் வருமாறு:-

சிறிமா பண்டாரநாயக்கா, தர்மசிறி சேனநாயக்கா, கே. பி இரத்னாநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், அலவி மௌலானா, சஷ்மன் கதிர்காமர் கே. பி. சில்வா, பட்டி வீரக்கூன், ஏ. ஆர். எம். ஹக்கீம்,

கே. குணசேகரா. காமினி பொன்சேகா, ரவீந்திர கருணாநாயக்க, லைட. பி. டீ சில்வா, பி. எம். பொடியப்புஹாமி,

சுனில் ஒபயசேகரா, கிளிபர்ட் ரத்வத்தை பேராசிரியர் விஸ்வவர்ணபால, டி. யூ குணசேகரா, விமலசிறி டி மெல்:

எம். எம். சுஹைர், பிரெடி உபயரத்னா, மொரின் ராஜபக்ஷ, நிஹால் ஜயமன்ன, ஏ. எம். சம்சுதீன்

எச். எம். மஹ்ரூப், காலிங்க ஓபேவன்ஸ, எம். எம். வி. ஒலிபர், பியதாஸ பண்டார

## ஆசிரியருக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஜூலை முதலாம் திகதி முதல் கல்வி அபிவிருத்தித் தமிழ ஆசிரியர்களுக்கான உதவு தொகைக் கொடுப்பனவுகள் யாவும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடமையாற்றிய மாதத்திற்கான உதவு தொகையை, ஆசிரியர்கள் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர் தத்தமது கோட்டக் கல்விப் பணிமனைகளில், அதற்குரிய, அதிகாரியால் உறுதி செய்யப்பட்ட படிவங்களை ஒப்படைத்துப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (ஆ)

## தாச்சி விளையாட்டு சங்கக் கூட்டம்

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் கூட்டம் நாளை (சனி) முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல தாச்சி விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (ஐ)

## பாடசாலைகளில்

யாழ் மணற்காடு, றோ. க. த. க. சிரேஷ்ட வித்தியாலயத்தின் கட்டடத் திறப்பு விழாவும் கல்விக் கண்காட்சியும் அதிபர் திரு. மோ. யேசுதாசன் தலைமையில் நாளை (சனி) காலை 8 மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினர்களாக தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜெகப் அடிகள், பிரதிகல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வேலாயுதம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

## ஜே. வி. பியின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது காலவரை செயல்படாதிருந்து வந்த ஜே. வி. பி. இயக்கத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கு தயாராக உள்ளனர் போன்று இவர்கள் காட்சியளித்தனர்.

காலநிலை பாதகமாக இருந்தும், ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று கேள்விப்பட்டு பலர் வந்திருந்தனர். ஆனால் சோமவன்ஸ கூட்டத்துக்கு வரவில்லை. எனினும் அவர் அனுப்பிவைத்த விசேட செய்தி கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

"மக்கள் முன் தோன்றிப் பேச ஆவலுடன் இருக்கின்றேன். அதற்கான வாய்ப்பை மக்களே வழங்க வேண்டும். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்" — என்று சோமவன்ஸ தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

கூட்டத்தில் பேசிய ஏனையோர் ஜே. வி. பியின் முன்னாள் தலைவர் றோகண விஜேவீரவின் திறத்தைப் பாராட்டிப் பேசினர். (இ-எ-6)

## நெடுந்தீவைச்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

தர்மலிங்கம் என்ற பெயருடைய இந்த நபர் யாழ் மாவட்டம், நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்றும்—

1987 இல் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் குண்டு வைத்து தகர்த்த சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சம்பவத்துக்குப் பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்குத் தப்பி ஓடினார் என்றும் 3 வருடங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் கொழும்பு திரும்பி விடுதலைப் புலிகள் இயக்க நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திவிரவாதச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக 6 4. 1986 இல் அவரின் புகைப்படம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொட்டாஞ்சேனை, ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள வீடொன்றில் வசித்து வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டாராம்.

கொட்டாஞ்சேனையில் முன்னர் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்ததாக கூறப்படும் நபர் ஒருவர் அளித்த தகவலைத் தொடர்ந்தே, பொலீஸார் இரவு வேளையில் நடத்திய திடீர் முற்றுகையின் போது அவர் கைது செய்யப்பட்டாராம்.

இவரிடம் பொலிஸார் [illegible] தீவிர விசாரணைக்குட்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ-எ-6)

# றுவாண்டா யுத்தம் இறுதிக் கட்டத்தில்

கிகாலி, ஜூலை 15

றுவாண்டா உள்நாட்டு யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதை அடுத்து ஆயிரக்கணக்கான றுவாண்டா அகதிகள் அண்டை நாடான ஸயருக்குள் சென்று கொண்டிருக்கின்றனர்.

துட்ஸி இன சிறுபான்மை பிரிவைக் கொண்ட றுவாண்டா தேசபக்தர் முன்னணி ஹூட்டு இன அரச படைகள் மீது இறுதித் தாக்குதலைத் தொடுக்கத் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து மணித்தியாலம் 10 ஆயிரம் பேர் என்ற ரீதியில் அகதிகள் எல்லையைக் கடந்து கொண்டிருக்கின்றனர்.

அகதிகளாக வெளியேறுவோரில் பெரும்பாலானவர்கள் ஹூட்டு இனத்தவர்கள்.

துட்ஸி இன தேசபக்தர் முன்னணியினரால் பழிவாங்கப்படலாம், என்று ஹூட்டு இனத்தவர்கள் அஞ்சுகின்றனர். (இ)


**தேவை**

யாழ் நகருக்கு அண்மையில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு தையல் கலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

இல. 669,
மே/பா. உதயன்
யாழ்ப்பாணம்.

(31928)



**முக்கிய அறிவித்தல்**

**வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்**
(கோப்பாய் வட்டப் பிரிவு)

**விசேட பொதுக் கூட்டம்**

இடம்:- அத்தியார் இந்துக் கல்லூரி
நீர்வேலி.

காலம்:- **15-07-94** வெள்ளிக்கிழமை
பி. ப. 4-00 மணி

இன்று கோப்பாய் வட்டப் பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்குமான விசேட பொதுக் கூட்டம் நடைபெறவிருப்பதால் அனைத்து வணிகர்களும் தங்கள் வணிக நிலையத்தை பிற்பகல் பூட்டி இக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இதில் தமிழீழ அரசியல்துறையினரும் கலந்து கருத்துரை வழங்குவார்கள்.

த. பரராசசிங்கம்,
தலைவர்.

அ. நாகேஸ்வரன்,
செயலாளர்.

(31891)



**இலங்கை ஆசிரியர் சங்கம்**
**யாழ். மாவட்டக் கிளை**

வடமாகாண ஆசிரியர் சங்கம்
30, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**கருத்தரங்கு**

**கல்வியில் அதிகாரப் பரவலாக்கல்**

காலம்: 17-07-1994 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10-00 மணி

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி
மண்டபம்

கருத்துரை வழங்குவோர்:

1. திரு. க. கந்தசாமி அவர்கள்
கல்விப் பணிப்பாளர், வலயம் 11
2. திரு. த. முத்துக்குமாரசாமி அவர்கள்
அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

கருத்துரைக்குப் பின் கலந்துரையாடல் நடைபெறும். தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

த. தேவராஜா
பொதுச் செயலாளர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.
11-07-1994.

[இ-8631]


## மரண அறிவித்தல்

### நமசிவாயம் கனகசபை

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நமசிவாயம் கனகசபை (இராசா) 14-07-1994 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், பாலசுந்தரம் (இளைப்பாறிய எழுதுவினைஞர்), கமலாதேவி, தர்மேந்திரன் (சுவிஸ்), அம்பிகாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (சுவிஸ்), தீனதயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (உள்நாட்டு இறைவரித் திணைக்களம் - கொழும்பு), இலட்சுமிகாந்தன் (ஜேர்மனி), சோமலேஸ்வரி, செல்வமணி, தபோதினி, பாமினி, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனகன், ஜனோபா, ஜெகன், சுகன்யா, தர்ஷினி, ஜானகி, தர்ஷிகா, சோபிகா, பேகன், விபூஷணா, விபூஷணன், அட்சணா, அட்சுதன், காண்டீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3. 00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பாலசுந்தரம்
(மகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(31932)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 898/8 இலுள்ள அச்சகத்தில் 15-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org